
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1074**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**45**

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# ஹஜ் கடமைக்குத் துணைநிற்கும் கழகம்!



தமிழ்நாடு ஹஜ் இல்லம் மாதிரிப் படம்.

இஸ்லாம் முன்வைக்கும் ஐந்தாவது கடமை ஹஜ் பயணம். ‘உடல்நலமும், பொருளாதார வசதியும் உள்ள ஒவ்வொரு இஸ்லாமியரும் தன் வாழ்நாளில் ஒருமுறையாவது மேற்கொள்ள வேண்டிய புனிதப் பயணம்’ என இஸ்லாம் வரையறுக்கிறது. துல்-ஹஜ் மாதத்தின் 8-ஆம் தேதி தொடங்கி, 12 அல்லது 13-ஆம் தேதி வரை நடைபெறும் ஹஜ் கடமைகளைப் பின்பற்றுவது வழக்கமான ஒன்று. இஸ்லாமியர்களுக்கு ஹஜ் பயணம் ஆகப்பெரும் நம்பிக்கை அளிப்பதால், உலகெங்கிலும் இருந்து கோடிக்கணக்கான இஸ்லாமியர்கள் ஹஜ் பயணம் செல்வதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக, இந்தப் பயணம் ஆன்மிக அனுபவங்களில் ஒன்று என்பது மட்டுமல்ல, அனைத்து இனங்களையும் மொழிகளையும் சேர்ந்த முஸ்லிம்களையும் இது ஒன்றிணைக்கிறது என்பதும் முக்கியமானது. அனைத்து நாடுகளில் இருந்தும் வருகைதரும் கோடிக்கணக்கான முஸ்லிம்களின் கால் சுவடுகள் மக்காவில் பதிந்திருக்கின்றன.

எனினும், இந்தப் பயணமும் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதும், இந்தியாவின் பல மாநிலங்களில் எல்லோருக்கும் சாத்தியப்பட்டதுதானா என்றால், நிச்சயம் இல்லை. அதற்குப் பல்வேறு சமூக - பொருளாதார காரணங்கள் இருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டிலோ தி.மு.க. ஆட்சி அமைந்த காலத்தில் எல்லாம் இஸ்லாமியர்களை சமூகரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் உயர்த்தி வாழ்வாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்ய முயன்ற கழகம், இஸ்லாமியப் பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வதற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. செயல்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

### தமிழில் கையேடு

1958-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ‘தமிழ்நாடு ஹஜ் கமிட்டி’யை, கலைஞர் தனது ஆட்சிக்காலங்களில் மேம்படுத்தி, அதிக நிதி ஒதுக்கீடு செய்தார். சவுதி அரேபியாவின் ஜெட்டா நகருக்கு சென்னையில் இருந்து நேரடி விமானங்களை இயக்க முயற்சிகளை மேற்கொண்டு, அதில் வெற்றி கண்டவர் கலைஞர். தமிழ்நாட்டுப் பயணிகளுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தென்னிந்திய முஸ்லிம்களுக்கும் அது பயன்பட்டது. ஏனெனில், அதற்கு முன்பு வரை மும்பைக்கோ அல்லது டெல்லிக்கோ சென்றுதான் மெக்கா செல்ல முடியும் என்ற நிலை இருந்தது.

பயணச் செலவுகளைக் குறைப்பதற்கு ஏதுவாக நிர்வாக மானியங்களை ஹஜ் கமிட்டிக்கு வழங்கினார் கலைஞர். ஹஜ் பயணிகளுக்கான வழிகாட்டி கையேடுகளைத் தமிழில் அச்சிட்டு இலவசமாக வழங்க ஏற்பாடு செய்தார். மெக்கா செல்லும் புனிதப் பயணிகளுக்கு மாவட்டவாரியாக பயிற்சி முகாம்களை நடத்த உத்தரவிட்டார். இஸ்லாமியர்களின் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தை உயர்த்த 3.5 சதவிகிதம் தனி இட ஒதுக்கீடு வழங்கியதன் மூலம், அவர்கள் பொருளாதாரரீதியாக முன்னேறி, ஹஜ் பயணத்தை மேற்கொள்ளும் வசதியைப் பெற அடித்தளம் அமைத்தார்.

ஹஜ் புனிதப் பயணத்திற்கு தமிழ்நாட்டில் இருந்து குலுக்கல் முறையில் ஆண்டுக்கு 1,800 பேருக்கு மிகாமல் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட முறைக்கு மாற்றாக, 1999-ஆம் ஆண்டு முதல் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள, சவுதி அரசு அனுமதி அளித்த போது, ஹஜ் பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கான உதவித் தொகையினையும் உயர்த்தினார் கலைஞர்.

### கூடுதல் எண்ணிக்கைக்கு குரல்

குறிப்பாக, 23-10-2009-இல் சட்டமன்றத்தில் இது தொடர்பாக விவாதமே நடந்தது. ‘ஹஜ் பயணம் செல்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்ய வேண்டும்’ என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் உறுப்பினர் ரவிக்குமார் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் மைதீன் கான், “2009-ஆம் ஆண்டு தமிழகத்திலிருந்து ஹஜ் பயணம் செய்ய 2,700 பேருக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. ஆனால், முதல்வர், துணை முதல்வர் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதால், 1,116 பேர் கூடுதலாகச் சேர்த்து 3,816 பேர் ஹஜ் பயணம் சென்றனர்” என்றார். இப்படி ஒவ்வோர் ஆண்டும் ஒன்றிய அரசிடம் போராடி, தமிழ்நாட்டில் இருந்து கூடுதல் எண்ணிக்கையில் ஹஜ் பயணத்திற்கு அனுப்பிவைத்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

> “இஸ்லாமியர்களின் வாழ்நாள் கடமையை, இத்தனை மகிழ்ச்சிக்குரியதாக மாற்றி அனுப்பும் இன்னொரு இந்திய மாநிலம் நிச்சயம் இல்லை என்பது மட்டும் உறுதி.”

அவரது வழியில் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் ஹஜ் பயணிகளுக்கு எண்ணற்ற சலுகைகளை அளித்துள்ளார். குறிப்பாக, 2018-ஆம் ஆண்டில் அன்றைய அ.தி.மு.க. அரசு, ஹஜ் பயணிகளுக்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கியது. 2018 மற்றும் 2019-ஆம் ஆண்டுகளில் 3,769 மற்றும் 4,397 ஹஜ் பயணிகள் முறையே ரூ.15,913 மற்றும் ரூ.13,639 பெற்றனர். கொரோனா பேரிடர் காரணமாக 2020 மற்றும் 2021-இல் ஹஜ் பயணத்தை ரத்து செய்தது சவுதி அரசு. அடுத்து வந்த திராவிட மாடல் அரசு, இந்த மானியத் தொகையை 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் ரூ.10 கோடியாக உயர்த்தியது. 2022-இல் 1,649 பயணிகளுக்கு தலா 27,628 ரூபாயும், 2023-ஆம் ஆண்டில் 3,987 ஹஜ் பயணிகளுக்கு தலா 26,070 ரூபாயும் வழங்கப்பட்டன.

2024-ஆம் ஆண்டில் தகுதியுடைய 5,728 பயனாளிகளுக்கு தலா ரூ. 17,480 வழங்குவதற்காக 10.01 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. தற்போது, 2025-ஆம் ஆண்டு முதல் ஹஜ் பயணி ஒருவருக்கு ரூ.25,000 வீதம் மானியமாக வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது. ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்வோரில் தலா 200 நபர்கள் வீதம் அவர்களுக்கு வகுப்புகள் எடுக்கப்பட்டு, அவர்களுக்கான தங்கும் இடம், தேவையான உணவு உள்ளிட்ட புனிதப் பயணம் மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறன.

ஹஜ் புனிதப் பயணத்தில் உள்ள பயணிகள் தொடர்புகொள்ளும் வகையில், அலுவலர்களை நியமித்துள்ளது நம் அரசு. இந்த அலுவலர்கள் அனைவருமே தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். ஏற்கெனவே ஹஜ் புனிதப் பயணம் சென்றுவந்த அனுபவம் உள்ளவர்களே இந்தப் பணிகளை மேற்கொண்டுள்ளனர் என்பது தனிச் சிறப்பானதாகும்.

இந்த ஆண்டு விண்ணப்பித்த அனைத்து நபர்களுக்கும் மானியம் கொடுக்கப்பட்டுள்ளது. எண்ணிக்கை மற்றும் தொகை இரண்டையும், கடந்த 4 ஆண்டுகளில் கணிசமான அளவு உயர்த்தியுள்ளது திராவிட மாடல் அரசு.

### ஹஜ் இல்லம் கட்டும் முதல்வர்

இது தவிர, புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் பயன்பெறும் வகையில், சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில், ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில், ‘ஹஜ் இல்லம்’ கட்டும் பணிகளைத் தொடங்கியுள்ளது நம் அரசு. 3.3.2025 அன்று நாகப்பட்டினத்தில் நடைபெற்ற அரசு விழாவில், ‘ஹஜ் இல்லம்’ கட்டுவதற்கான அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சர், 16.12.2025 அன்று, அந்தப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் விமானம் புறப்படுவதற்கு ஒருநாள் முன்னர், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு அலுவலகத்தை அணுகி, பயண நடைமுறைகளை நிறைவேற்றி, விமான நிலையத்திற்குப் புறப்படுவதற்கு ஏதுவாக இந்த ஹஜ் இல்லம் அமைக்கப்படுகிறது.

நான்கு தளங்களுடன் அமையவுள்ள ஹஜ் பயணிகள் இல்லத்தில், 400 ஹஜ் பயணிகள் தங்கும் வகையில் மொத்தம் 100 படுக்கை அறைகளுடன் பல்வேறு வசதிகளும் அமைய வுள்ளன. ஹஜ் பயண நெருக்கடியில் தனியார் விடுதிகளைத் தேடி அலையும் சுமை, இனி ஹஜ் பயணிகளுக்கு இருக்கப் போவதில்லை. இஸ்லாமியர்களின் வாழ்நாள் கடமையை, இத்தனை மகிழ்ச்சிக்குரியதாக மாற்றி அனுப்பும் இந்தியாவின் இன்னொரு மாநிலம் நிச்சயம் இல்லை என்பது மட்டும் உறுதி!

...நீளும்

## திருப்பரங்குன்றம் - முழு வரலாற்று ஆய்வு!



திருப்பரங்குன்றத்தை அயோத்தியாக மாற்றும் சூழ்ச்சியோடு சங் பரிவார்கள் செய்து வரும் சதிவேலைகளுக்கு மத்தியில், ‘திருப்பரங்குன்றம் – முழு வரலாற்று ஆய்வு’ நூலை வெளிக்கொண்டு வந்துள்ளார் எழுத்தாளர் சூர்யா சேவியர். பரங்குன்ற மலையின் தோற்றம், பரங்குன்றமும்–பரங்குன்றச் சுற்றத்து மனிதர்கள் வாழ்ந்த வரலாறு, சிக்கந்தர் தர்ஹா உருவான வரலாறு, கார்த்திகை தீபம் வரலாறு, இந்து சமய அறநிலையத்துறை வரலாறு, மதமும்–அரசியலும்–மதச்சார்பின்மையும் என மொத்தம் 13 தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாடு தொல்லியல் துறையின் மூத்த கல்வெட்டு ஆய்வாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற டாக்டர் ஆ.பத்மாவதி அவர்களின் அணிந்துரையுடன், ஓவியர் ரவி பேலட் வரைந்த 20 கோட்டோவியங்களுடன் 175 பக்கங்களில் உருவாகியுள்ள இந்நூலை பாரதி புத்தகாலயம் பதிப்பித்துள்ளது.

300 ரூபாய் விலையுள்ள இந்த நூல், அனைவரும் வாசிக்க வேண்டும் என்ற பிரச்சார நோக்கத்திற்காக 200 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட உள்ளதாக எழுத்தாளர் சூர்யா சேவியர் தனது சமூக வலைதளப் பக்கத்தில், தெரிவித்துள்ளார்.

பத்து அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் இந்நூலை வாங்கினால், ரூ.150-க்கு கொடுக்க முடிவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அனைத்திற்கும் தபால் கட்டணம் இல்லை. 94449 60935 என்ற எண்ணுக்கு GPAY செய்து, அதே எண்ணிலுள்ள வாட்சப்பில் உங்கள் முகவரியைப் பதிவு செய்தால், புத்தகம் அனுப்பி வைக்கப்படும். சென்னைப் புத்தகக் காட்சியிலும் கிடைக்கும். www.thamizhbooks.com தளத்தின் மூலம் ஆன்லைனிலும் வாங்கலாம். தமிழ்நாட்டின் மத நல்லிணக்கப் பண்பை நிலைநாட்டிட, திருப்பரங்குன்றத்தின் வரலாற்றை அறிந்துகொள்வது அவசியம். அதற்கான அரிய வாய்ப்பாக வெளிவருகிறது இந்நூல்!

## ஃப்ளாஷ்பேக்



### மணநாளில் முத்தமிழறிஞரிடம் வாழ்த்து!



ம.சேசுராசு

24.01.2015 அன்று, எங்களது 19-வது மணநாளை முன்னிட்டு, தலைவர் கலைஞர் அவர்களிடம் கோபாலபுரம் இல்லத்தில் நானும் என் துணைவியார் விண்ணரசியும் வாழ்த்து பெற்றோம். உடன் மகள்கள் சே.தமிழ்காவியா, சே.கவியரசி ஆகியோர் உள்ளனர். மும்பை ஜவேரி பஜார் பகுதி கழகச் செயலாளராக 10 ஆண்டுகளும் இளைஞர் அணி அமைப்பாளராக 18 ஆண்டுகளும் செயல்பட்டு, தலைவரிடம் பாராட்டு பெற்றேன். 1999-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், சென்னை மேயராக இருந்தபோது மும்பை வருகை தந்தார். அப்போது, வெண் சீருடையில் நூற்றுக்கணக்கில் இளைஞர் அணித் தோழர்களுடன் சென்று விமான நிலையத்தில் வரவேற்பு அளித்ததுடன், அவர் இருந்த மூன்று நாட்களும் தலைவருக்குப் பாதுகாப்புவளையம் அமைத்துக் கொடுத்தது, மும்பை தமிழர்கள் மத்தியில் சிறப்பாகப் பேசப்பட்டது.

**– சாத்தரசன்பட்டி ம.சேசுராசு,**
**பொறுப்புக்குழுத் தலைவர், மும்பை தி.மு.க.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### விடுதலைப் போராட்டங்களுக்கு வாழ்த்து!

1956-ஆம் ஆண்டு, திருச்சியில் நடைபெற்ற தேர்தல் சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில், விடுதலை பெற்ற நாடுகளுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. ‘அன்னிய ஆதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலை பெற்ற வியட்நாம், மலேயா, மொராக்கோ முதலிய நாடுகளுக்கு இம்மாநாடு மனமார்ந்த வாழ்த்துதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது. உலகெங்கும் ஆதிக்கக்காரர்களின் இனவெறியைக் கண்டித்தும், மனித உரிமைகளுக்காக நடைபெறும் கிளர்ச்சிகளுக்கு இம்மாநாடு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறது’ என்றது அத்தீர்மானம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131